262

DIRECTOR OF SOCIAL WELFARE
23 MAR 2017
GUINDY, CHENNAI-600 032.

**சுருக்கம்**

சமூக நலம் மற்றும் சத்துணவு திட்டத் துறை – தொடக்கக்கல்விக்கு ஆதரவளிக்கும் தேசிய அளவிலான ஊட்டச்சத்து வழங்கும் திட்டம் – மைய அரசு உதவி – தொடராச் செலவினம் சத்துணவு மையங்களுக்கு அலுமினிய பிரஸ்ஸர் குக்கர் வாங்குவதற்கு ₹480.75 இலட்சம் விடுவித்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

**சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் (சந.4–1) துறை**

**அரசாணை (ப) எண். 70** — **நாள். 21.03.2017.**
திருவள்ளுவர் ஆண்டு 2048
மன்மத, பங்குனி 8

படிக்கப்பட்டவை

1. மைய அரசு, மனித வள மேம்பாட்டுத் துறை கடித எண்.F.No.9–2/2015/MDM, நாள். 26–05–2015.
2. மைய அரசு மனித வள மேம்பாட்டுத் துறை கடித எண். 4–9,2009/Desk/MDM, நாள். 01–09–2016,
3. சமூக நல இயக்குநர் கடித எண். 29584/சஉதி–2/2016, நாள். 09–12–2016.

---

**ஆணை:-**

மேலே முதலாவதாக படிக்கப்பட்ட கடிதத்தில் மைய அரசின் மனித வள மேம்பாட்டுத் துறை ஏனையவற்றுடன் 9615 பள்ளி சத்துணவு மையங்களுக்கு மையம் ஒன்றிற்கு தலா ₹5,000/– வீதம் ₹480.75 இலட்சத்திற்கான குடியரசுத் தலைவரின் ஒப்புதலை வழங்கி, இரண்டாவதாக படிக்கப்பட்ட கடிதத்தில் அத்தொகையினை கீழ்க்கண்டவாறு விடுவித்துள்ளது.

| மாநிலம் | சமையல் உபகரணங்கள் மாற்ற ஒப்புதல் பெறப்பட்ட பள்ளிகளின் எண்ணிக்கை | தொகை ₹ இலட்சத்தில் |
|---|---|---|
| தமிழ்நாடு | 9615 | 480.75 |

2. சமூக நல இயக்குநர் தனது கருத்துருவில், தற்போது பள்ளி சத்துணவு மையங்கள் யாவும் சீரமைக்கப்பட்டு வைப்பறையுடன் கூடிய சமையலறைக் கட்டிடம் மற்றும் உணவு தயாரிக்க எரிவாயு இணைப்பு போன்றவைகள் பொறுத்தி மையங்கள் நவீனப்படுத்தியுள்ளதாலும், வாரத்தில் இரு தினங்கள் பயறு மற்றும் கொண்டை கடலை ஆகியவற்றினை வேகவைத்து மாணவர்களுக்கு சுண்டலாக வழங்கவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாலும் 100 மாணவர்களுக்கும் குறைவாக உள்ள பள்ளி சத்துணவு மையங்களில் காய்கறி மற்றும் பருப்பு வகைகள் சமைக்க பழைய குக்கர் அல்லாத பாத்திரங்களுக்கு பதிலாக புதிய அலுமினிய குக்கர் 12 லிட்டர் கொள்ளளவு கொண்ட ஒன்று வீதம் வழங்கினால், மையங்களில் தற்போது பயன்பாட்டில் இருக்கும் எரிவாயு செலவு குறைவதற்கு வாய்ப்புகள் அதிகம் உள்ளதாகவும், பிரஸ்ஸர் குக்கர் மூலம் சமைப்பதன் மூலம் தேவையற்ற



272

செலவினங்கள் குறையும் வாய்ப்பு உள்ளதாகவும், குறித்த நேரத்தில் சமையல் பணிகள் எளிதில் முடிக்க ஏதுவாகும் என்றும், பிரஸ்ஸர் குக்கரில் சமைப்பதின் மூலம், காய்கறிகள் மற்றும் பருப்பு வகைகளை குறுகிய காலத்திற்குள் நல்லமுறையில் வேகவைக்கவும் இப்பொருட்களில் உள்ள சத்துக்கள் வீணாகாமல் தடுக்கப்படுவதின் மூலம் மாணவர்களின் உடல் ஆரோக்கியம் கூடுமெனவும், பிரஸ்ஸர் குக்கர் மூலம் உணவுப் பொருட்களை மூடி சமைப்பதின் முலம் தேவையற்ற பொருட்கள் உணவில் கலப்பதை தடுப்பதோடல்லாமல், பல்லி போன்ற விஷ ஜந்துகள் உணவில் விழாமல் இருக்க அதிக வாய்ப்புகள் உள்ளதால், எவ்வித அசம்பாவித சம்பவங்கள் நடக்கும் வாய்ப்புகள் குறைவாக உள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

3. மேலும், மேற்கண்டவாறு பெறப்பட்ட ஒதுக்கீடான ₹480.75 இலட்சத்தில் தற்போது நவீனப்படுத்தப்பட்டுள்ள சத்துணவு மையங்களை மேலும் செம்மையாக நடத்தவும் எரிவாயு சிக்கனத்தினை உத்தேசித்தும், மைய பொறுப்பாளர்களுக்கு வழங்கும் எரிபொருள் மானியத்திற்குள் அந்தந்த மாத எரிபொருள் தேவையினை பூர்த்தி செய்து கொள்ள ஏதுவாக பழைய குக்கர் அல்லாத பாத்திரங்களுக்கு பதிலாக முதற்கட்டமாக 100 மற்றும் அதற்கு கீழ் உணவு உண்ணும் மாணவர்கள் உள்ள ஒவ்வொரு மையத்திற்கும் 12 லிட்டர் கொள்ளளவு கொண்ட ஒரு அலுமினிய குக்கர் ₹2,500/–க்கு மிகாமல் மைய அரசின் வழிகாட்டு நெறிமுறைகளின்படி கொள்முதல் செய்து சம்பந்தபட்ட மையங்களுக்கு வழங்க ஏதுவாக பெறப்பட்ட ஒதுக்கீட்டில் இணைக்கப்பட்டுள்ள மாவட்டங்களில் உள்ள மையங்களுக்கு வழங்க தேவையான உத்திரவினை வழங்க கேட்டுக் கொண்டுள்ளார்.

4. சமூக நல இயக்குநரின் கருத்தினை அரசு கவனமுடன் பரிசீலனை செய்த பின்னர் முதற்கட்டமாக 100 மற்றும் அதற்கு கீழ் உணவு உண்ணும் மாணவர்கள் உள்ள ஒவ்வொரு மையத்திற்கும் 12 லிட்டர் கொள்ளளவு கொண்ட ஒரு அலுமினிய குக்கர் ₹2,500/–க்கு மிகாமல் மைய அரசின் மதிய உணவு திட்ட வழிகாட்டுதல் நெறிமுறைகளின்படி வழங்க ஏதுவாக ₹480.75 இலட்சம் (ரூபாய் நான்கு கோடியே எண்பது இலட்சத்து எழுபத்தைந்தாயிரம் மட்டும்) வழங்கி ஆணையிடுகிறது.

5. மேலே பத்தி 4–ல் அனுமதிக்கப்பட்ட செலவு, பின்வரும் தலைப்பின்கீழ் பற்று வைக்கப்படவேண்டும்.

> 2236– சத்துணவு –02 சத்துணவு மற்றும் பானங்கள் வழங்குதல் –102 மதிய உணவு – பன்னிரெண்டாம் ஐந்தாண்டு திட்டப் பணிகள்–III மத்திய அரசு பொறுப்பேற்பவை SA – தொடக்கக் கல்விக்கு ஆதரவளிக்கும் தேசிய அளவிலான ஊட்டச் சத்து வழங்கு திட்டம் (மதிய உணவுத் திட்டம்) 24– பொருள்களும் வழங்கலும்
> (த.தொ.கு. 2236–02–102–SA–2406)

6. மேலே பத்தி 4ல் ஒப்பளிப்பு செய்யப்பட்ட தொகையினை தமிழ்நாடு நிதி விதித் தொகுப்பு–1, (TNFC Vol-I) பிரிவுக்கூறு (Article) 99–ன்படி தொகையினை பெற்றுக் கொள்ள சமூக நல இயக்குநருக்கு அனுமதி அளிக்கப்படுகிறது.

7. தமிழ்நாடு நிதி விதித் தொகுப்பு–1, (TNFC Vol-I) பிரிவுக்கூறு (Article) 99–ன் கீழ், தயாரித்து சமர்ப்பிக்கப்படும் முன்பணப் பட்டியல் சரியாக இருக்கும் நேர்வில், அதனை ஏற்றுக் கொள்ளுமாறு சம்பளக் கணக்கு அலுவலர் (கிழக்கு), எழும்பூர் சென்னை–8 அவர்கள் அறிவுறுத்தப்படுகிறார்.

8. தேவையான கூடுதல் பணம் 2016–2017–ஆம் ஆண்டிற்குரிய இறுதி திருத்திய மதிப்பீட்டில் வழங்கப்படும். 2016–2017–ஆம் ஆண்டு இறுதி திருத்திய மதிப்பீடு, நிலுவை நிதி ஒதுக்கீட்டின்படி மேலே பத்தி 4ல் ஒப்பளிப்பு செய்யப்பட்ட தொகையினை வாங்கி வழங்க சமூக நல இயக்குநருக்கு அதிகாரம் அளிக்கப்படுகிறது. நிதித் (சந) துறைக்கு 2016–2017–ஆம் ஆண்டிற்குரிய இறுதி திருத்திய மதிப்பீட்டிற்கு கருத்துரு அனுப்பும் பொழுது சமூக நல இயக்குநர் இக்கூடுதல் செலவினத்தை தவறாது இணைத்து அனுப்ப வேண்டும்.



273

இருப்பினும், இச்செலவினத்தை துணை மதிப்பீட்டில் சேர்ப்பதற்கு சட்டசபையின் கவனத்திற்கு கொண்டு செல்லப்படவேண்டும். 2016–2017 துணை மதிப்பீட்டில் சேர்ப்பதற்கு தேவையான வரைவு குறிப்பு அனுப்புமாறு சமூக நல இயக்குநர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

9. தமிழ்நாடு ஒளிவு மறைவற்ற ஒப்பந்தப் புள்ளி சட்டம் 1998 மற்றும் விதிகள் 2000–த்தினை பின்பற்றி பிரஸ்ஸர் குக்கர்களை தேவையான அளவில் வாங்க சமூக நல இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

10. சமூக நல இயக்குநர் மற்றும் மாவட்ட ஆட்சியாளர்கள் பெறப்பட்ட தொகைக்கு தனியாக மற்றும் முறையான கணக்கை பராமரிக்க வேண்டும். நடைமுறை விதிகளின்படி தனியாக சொத்து பதிவேடு ஒன்று பராமரிக்கப்படவேண்டும். இந்த ஆணையில் பெறப்பட்ட மைய அரசின் உதவி குறித்து மாவட்ட வாரியாக பள்ளிகளுக்கு வழங்கப்பட்ட விவரம் குறித்து அரசிற்கு அனுப்பப்படும் பயனீட்டு சான்றிதழ் மற்றும் காலாண்டு முன்னேற்ற அறிக்கையில் தெரிவிக்கவேண்டும்.

11. மேலும் இத்திட்டத்தை சிறப்பாக செயல்படுத்த, பிரஸ்ஸர் குக்கர்களை தரமானதாக கொள்முதல் செய்வதற்கு தேவையான தொழில் நுட்ப வடிவமைப்புகளை (Technical specification) வரையறுக்குமாறும் சமூக நல இயக்குநர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

12. இவ்வாணை நிதித்துறையின் அ.சா.எண். 104, நிதி(சந)/, நாள்.03 –02–2017–ல் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

க. மணிவாசன்
அரசுச் முதன்மைச் செயலாளர்.

பெறுநர்,
சமூக நல இயக்குநர், சென்னை–32.
சம்மந்தப்பட்ட மாவட்ட ஆட்சியாளர்கள்,
சம்பந்தப்பட்ட மாவட்ட கருவூலக அலுவலர்கள்,
அனைத்து சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர்கள்,
மாநில கணக்காயர், சென்னை–18.

நகல்:–
நிதி (சந, வ.செ.பொ.1/ வ.செ.பொ.2) துறை, சென்னை– 600 009.
சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் (ச.ந.2 துறை), சென்னை–9.
பள்ளிக் கல்வித் துறை, சென்னை–9.
பள்ளிக் கல்வித் துறை இயக்குநர், சென்னை–6.
தொடக்கக்கல்வி இயக்குநர், சென்னை–6.
ஆணையாளர், பெருமாநகராட்சி, சென்னை–3.
இயக்குநர், சர்வ சிக்ஷா அபியான், சென்னை–6.
மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், சென்னை–9.
மாண்புமிகு சமூக நலம் மற்றும் சத்துணவு திட்ட அமைச்சரின் முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை–9.
சமூக நலம் மற்றும் சத்துணவு திட்டத் துறை முதன்மைச் செயலாளரின் முதன்மைத் தனிச் செயலாளர், சென்னை–9.
இருப்பிட கணக்கு அலுவலர், தலைமைச் செயலகம், சென்னை–9.
இருப்புக் கோப்பு / உதிரி நகல்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.



271

266

## இணைப்பு

அரசாணை (ப) எண்.70, சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் (சந.4–1) துறை, நாள். 21–03–2017

### 2015–2016–ம் ஆண்டிற்கான பள்ளி சத்துணவு மையங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்படும் அலுமினிய பிரஸ்ஸர் குக்கர்

| வ.எண் | மாவட்டத்தின் பெயர் | ஒதுக்கீடு செய்யப்படும் மையங்களின் எண்ணிக்கை | தொகை (₹2500/– வீதம் |
|---|---|---|---|
| 1 | அரியலூர் | 199 | 4,97,500.00 |
| 2 | சென்னை | 131 | 3,27,500.00 |
| 3 | கோயம்புத்தூர் | 573 | 14,32,500.00 |
| 4 | கடலூர் | 595 | 14,87,500.00 |
| 5 | தருமபுரி | 609 | 15,22,500.00 |
| 6 | திண்டுக்கல் | 752 | 18,80,000.00 |
| 7 | ஈரோடு | 684 | 17,10,000.00 |
| 8 | காஞ்சீபுரம் | 592 | 14,80,000.00 |
| 9 | கன்னியாகுமரி | 243 | 6,07,500.00 |
| 10 | கரூர் | 393 | 9,82,500.00 |
| 11 | கிருஷ்ணகிரி | 766 | 19,15,000.00 |
| 12 | மதுரை | 636 | 15,90,000.00 |
| 13 | நாகப்பட்டினம் | 478 | 11,95,000.00 |
| 14 | நாமக்கல் | 507 | 12,67,500.00 |
| 15 | நீலகிரி | 336 | 8,40,000.00 |
| 16 | பெரம்பலூர் | 139 | 3,47,500.00 |
| 17 | புதுக்கோட்டை | 747 | 18,67,500.00 |
| 18 | இராமநாதபுரம் | 756 | 18,90,000.00 |
| 19 | சேலம் | 679 | 16,97,500.00 |
| 20 | சிவகங்கை | 754 | 18,85,000.00 |
| 21 | தஞ்சாவூர் | 751 | 18,77,500.00 |
| 22 | தேனி | 285 | 7,12,500.00 |
| 23 | திருநெல்வேலி | 918 | 22,95,000.00 |
| 24 | திருவள்ளூர் | 707 | 17,67,500.00 |
| 25 | திருவண்ணாமலை | 878 | 21,95,000.00 |
| 26 | திருவாரூர் | 457 | 11,42,500.00 |
| 27 | தூத்துக்குடி | 863 | 21,57,500.00 |
| 28 | திருச்சிராப்பள்ளி | 615 | 15,37,500.00 |
| 29 | திருப்பூர் | 736 | 18,40,000.00 |
| 30 | வேலூர் | 939 | 23,47,500.00 |
| 31 | விருதுநகர் | 640 | 16,00,000.00 |
| 32 | விழுப்புரம் | 872 | 21,80,000.00 |
| | மொத்தம் | 19,230 | 4,80,75,000.00 |

க. மணிவாசன்
அரசுச் முதன்மைச் செயலாளர்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

21-3-17
பிரிவு அலுவலர்.

21.3.17

276